**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்)**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**

**காணொளிகாட்சி விசாரணை (Video Conference)**
**ஆணை நாள்: 04.06.2025**

**முன்னிலை**
**முனைவர் மா.செல்வராஜ் எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

..............

**வழக்கு எண். SA 14393/F/2024**

திரு. செ. கண்ணன் ... **மனுதாரர்**

**/ எதிர் /**

பொதுத் தகவல் அலுவலர்/
முதன்மைப் பணியாளர் அலுவலர்,
முதன்மை இயக்குநர் (நெ) அலுவலகம்,
நெடுஞ்சாலைத்துறை,
சென்னை - 600 025. ... **பொது அதிகார அமைப்பு**

**ஆணை**

மேற்குறிப்பிட்ட வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு.செ.கண்ணன் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.N. ராமமூர்த்தி, பொதுத் தகவல் அலுவலர்/ முதன்மைப் பணியாளர் அலுவலர், முதன்மை இயக்குநர் (நெ) அலுவலகம், நெடுஞ்சாலைத்துறை, கிண்டி, சென்னை - 600 025 அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 26.09.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், 17(b) குற்ற குறிப்பாணை எண் 621/கமுக்கம்4(1)/2024, நாள் 26.03.2024இன் படி வழங்கப்பட்டது தொடர்பாக மறுப்பு தெரிவித்த கடிதத்தை முதன்மை இயக்குநர் (நெ) அலுவலகத்தில் பராமரிக்கப்படும் கடித பதிவேட்டில் பதியப்பட்ட பக்கத்தின் நகலினை கோரிய விவரம், கடித எண் 605/2024/கமுக்கம் நாள் 28.03.2024 மறுப்பு தெரிவிதித கடிதத்தின் தொடர் நடவடிக்கை குறித்த விவரம், 17(b) குற்ற குறிப்பாணை வழங்கிய நாள்

முதல் இறுதி முடிவு எடுக்கும் நாட்கள் குறித்த நாள் பற்றிய விவரம், விஜிலன்ஸ் அறிக்கை கிடைக்கப் பெற்ற நாள் மற்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட விபரம், 17(b) குற்ற குறிப்பாணை குற்றமாவதற்கான ஆதாரத்தின் நகல் பற்றிய விவரம், Bitumen POL prices மற்றும் 17(b) குற்ற குறிப்பாணையில் ஒப்பந்த உடன்படிக்கை முரண்பாட்டிற்கான காரணம் என்பது தொடர்பான தகவல்களை 20 இனங்களில் வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் 26.09.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல் வழங்கியுள்ளார். அத்தகவலில் திருப்தியடையாத மனுதாரர் 01.10.2024 நாளிட்ட பிரிவு 19(1)-ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் / இணை இயக்குநர் (நிர்வாகம்), முதன்மை இயக்குநர் அலுவலகம் (நெ), நெடுஞ்சாலைத் துறை, சென்னை அவர்கள் மனுதாரரின் மனுவினை 09.10.2024 நாளிட்ட கடிதம் வாயிலாக பொதுத் தகவல் அலுவலர் / துணை தலைமைப் பொறியாளர், கட்டுமானம் மற்றும் பராமரிப்பு, நெடுஞ்சாலைத் துறை, சென்னை அவர்களுக்கு இனம் 7, 8, 9, 10, 12, 13, 14, 15, 17, 18, 19 ஆகிய இனங்களுக்கான தகவல்களை வழங்க கேட்டுக் கொள்ளப்பட்டது. மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால், 04.11.2024 நாளிட்ட பிரிவு 19(3)இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 04.06.2025 அன்று இவ்வாணையத்தால் காணொளிகாட்சி விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவல்களில் இனம் 2, 5, 6, 7, 8, 9 10, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 ஆகிய இனங்களுக்கு திருப்தியற்ற தகவல்கள் வழங்கியுள்ளதாகவும், முழுமையான தகவல் வழங்காத பொதுத் தகவல் அலுவலர் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, முழுமையான தகவல்களை உரிய பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து பெற்று வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரியுள்ள தகவல்கள் ஏற்கனவே 26.09.2024 மற்றும் 29.10.2024 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக முழுமையான தகவல்கள் வழங்கியுள்ளதாகவும், மனுதாரர் கோரிய தகவல்கள் அனைத்தும் கமுக்கம் என்பதால் மனுதாரருக்கு உரிய காலத்திற்குள் தகவல் வழங்க இயலவில்லை எனவும், மனுதாரரின் 17(b) குற்ற குறிப்பாணை ரத்து செய்யப்பட்டது என ஆணையத்தில் தெரிவித்தார். மேலும், ஆணையத்தின் உத்தரவிற்கிணங்க மனுதாரர் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான தகவல்களை விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் உறுதியளித்தார்.

6. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், இனம் 2, 5, 6, 7, 8, 9 10, 12, 13, 14, 15, 16, 17, 18, 19 ஆகிய இனங்களுக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிய வருகிறது எனவே, இன்றைய விசாரணையில் பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் வழங்கி கீழ்கண்டவாறு உத்தரவு பிறப்பிக்கின்றது:-

- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்களை உரிய பொது அதிகார அமைப்பிடமிருந்து பெற்று உரிய ஆவண நகல்களுடன் <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது"</u> என்ற <u>முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற***

*நான்கு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, <u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகலினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனு முற்றாக்கம் செய்து <u>உத்தரவிடப்படுகிறது</u>.*

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14393/F/2024</u>**
**<u>பெறுநர்</u>**
பொதுத் தகவல் அலுவலர்/
முதன்மைப் பணியாளர் அலுவலர்,
முதன்மை இயக்குநர் (நெ) அலுவலகம்,
நெடுஞ்சாலைத்துறை, சென்னை - 600 025

பொதுத் தகவல் அலுவலர் /
துணை தலைமைப் பொறியாளர்,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு,
நெடுஞ்சாலைத் துறை, சென்னை - 25

**<u>வழக்கு எண். SA 14393/F/2024</u>**
**<u>மனுதாரர் / மேல்முறையீட்டாளர்</u>**
திரு. செ.கண்ணன்,
202/1, எக்சர்வீஸ் மென் காலனி,
ரெட்டியூர், சேலம் மாவட்டம் - 636004,

Copy to: Judgement File/ Spare.
JE / PA 05.06.2025.